கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.256/2010**

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 06.04.2026 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.E.Swetha, B.B.A., L.L.B.(Hons), அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 06.04.2026 | சாட்சி | பி.வா.சா.2 |
| பெயர் | அறிவழகன் | வயது | 65 |
| தந்தை பெயர் | பாண்டுரங்கன் | கிராமம் | கத்தாழை |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை** :

1. எனது தாயாரின் பெயர் பார்வதி. பாண்டுரங்கன் பார்வதிக்கு தம்பதியருக்கு எத்தனை மகன் மகள்கள் என்றால் 2 மகன்கள் மற்றும் 2 மகள்கள். என் உடன்பிறந்த சகோதரர் பெயர் ஆறுமுகம். அவரும் கத்தாழையில் தான் இருக்கிறார். எனது இரண்டு சகோதரிகள் சிதம்பரம் கிராமம் பள்ளிக்குப்பத்திலும், மற்றொருவர் தலைக்குளத்திலும் இருக்கிறார். எனக்கும் எனது சகோதரருக்கும் என்ன தொழில் என்றால் விவசாயம். எனது தகப்பனார் இறந்து 2 வருடம் ஆகிறது. எனது தந்தையாருக்கு சொத்து உள்ளதா என்றால் எங்களது சொத்தை NLC ஆர்ஜிதம் செய்துவிட்டார்கள்.

2. கத்தாழையில் உள்ள குடியிருப்பு பகுதிகள் இன்னும் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நிலம் ஆர்ஜிதம் செய்ததாக சாட்சியம் அளித்த நிலையில் என்னுடைய நிலத்தை எவ்வளவு ஆர்ஜிதம் செய்தார்கள் என்றால் என்னுடைய நிலத்தை ஆர்ஜிதம் செய்யவில்லை. எனக்கு சொத்துக்கள் இல்லை என்பதால் ஆர்ஜிதம் செய்யவில்லை என்றால் சரிதான்.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct. (Sd/- E.Swetha)
Additional District Munsif
Chidambaram